ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# பெரிய திருமடல்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# பெரிய திருமடல்

## தனியன்

**பொன் உலகில் வானவரும் பூ மகளும் போற்றி செய்யும் ⋆**
**நன்னுதலீர் ! நம்பி நறையூரர் ⋆**
**மன் உலகில் என் நிலைமை கண்டும் இரங்காரேயாம் ஆகில் ⋆**
**மன்னு மடல் ஊர்வன் வந்து**

‡ மன்னிய பல் பொறி சேர் ஆயிர வாய் வாள் அரவின் ⋆
சென்னி மணிக் குடுமித் தெய்வச் சுடர் நடுவுள் ⋆
மன்னிய நாகத்தணை மேல் ஓர் மாமலை போல் ⋆
மின்னு மணி மகர குண்டலங்கள் வில் வீச ⋆
துன்னிய தாரகையின் பேர் ஒளி சேர் ஆகாசம் ⋆
என்னும் விதானத்தின் கீழால் || **1** ||

இரு சுடரை
மன்னும் விளக்காக ஏற்றி ⋆
மறி கடலும் பன்னு திரைக் கவரி வீச || **2** ||

நில மங்கை
தன்னை முன நாள் அளவிட்ட தாமரை போல் ⋆
மன்னிய சேவடியை வான் இயங்கு தாரகை மீன் ⋆
என்னும் மலர்ப் பிணையல் ஏய்ந்த || **3** ||

மழைக் கூந்தல்
தென்னன் உயர் பொருப்பும் தெய்வ வடமலையும் ⋆

என்னும் இவையே முலையா வடிவமைந்த ⋆
அன்ன நடைய அணங்கே ‖ **4** ‖

அடி இணையைத்
தன்னுடைய அங்கைகளால் தான் தடவத் தான் கிடந்து ⋆
ஓர் உன்னிய யோகத்துறக்கம் தலைக் கொண்ட பின்னை ⋆
தன் நாபி வலயத்துப் பேர் ஒளி சேர் ⋆
மன்னிய தாமரை மாமலர் பூத்து ⋆
அம்மலர் மேல் முன்னம் திசைமுகனைத் தான் படைக்க ‖ **5** ‖

மற்றவனும்
முன்னம் படைத்தனன் நான்மறைகள் ⋆
அம்மறை தான் மன்னும் அறம் பொருள் இன்பம் வீடென்றுலகில் ⋆
நன்னெறி மேம் பட்டன நான்கன்றே ‖ **6** ‖

நான்கினிலும்
பின்னையது பின்னைப் பெயர் தரும் என்பது ⋆
ஓர் தொன்னெறியை வேண்டுவார் வீழ் கனியும் ஊழ் இலையும் ⋆
என்னும் இவையே நுகர்ந்துடலம் தாம் வருந்தி ⋆
துன்னும் இலைக் குரம்பைத் துஞ்சியும் ‖ **7** ‖

வெஞ்சுடரோன்
மன்னும் அழல் நுகர்ந்தும் வண் தடத்தினுள் கிடந்தும் ⋆
இன்னதோர் தன்மையராய் ஈங்குடலம் விட்டெழுந்து ⋆
தொன்னெறிக் கண் சென்றார் எனப்படும் சொல் அல்லால் ⋆
இன்னதோர் காலத்தினை யார் இது பெற்றார் ⋆
என்னவும் கேட்டறிவதில்லை ‖ **8** ‖

உளதென்னில்
மன்னும் கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள் ⋆
அன்னதோர் இல்லியின் ஊடு போய் ॥ **9** ॥

வீடென்னும்
தொன்னெறிக் கண் சென்றாரைச் சொல்லுமின்கள் சொல்லாதே ⋆
அன்னதே பேசும் அறிவில் சிறு மனத்து ⋆
ஆங்கன்னவரைக் கற்பிப்போம் யாமே ॥ **10** ॥

அது நிற்க
முன்னம் நான் சொன்ன அறத்தின் வழி முயன்ற ⋆
அன்னவர் தாம் கண்டீர்கள் ஆயிரக் கண் வானவர் கோன் ⋆
பொன் நகரம் புக்கமரர் போற்றிசைப்ப ॥ **11** ॥

பொங்கொளி சேர்
கொல் நவிலும் கோள் அரிமாத் தான் சுமந்த கோலம் சேர் ⋆
மன்னிய சிங்காசனத்தின் மேல் ॥ **12** ॥

வாள் நெடுங்கண்
கன்னியரால் இட்ட கவரிப் பொதி அவிழ்ந்து ⋆
ஆங்கின்ன் இளம் பூந்தென்றல் இயங்க ॥ **13** ॥

மருங்கிருந்த
மின் அனைய நுண் மருங்குல் மெல் இயலார் வெண் முறுவல் ⋆
முன்னம் முகிழ்த்த முகிழ் நிலா வந்தரும்ப ⋆
அன்னவர் தம் மானோக்கம் உண்டாங்கணி மலர் சேர் ⋆
பொன் இயல் கற்பகத்தின் காடுடுத்த மாடெல்லாம் ⋆
மன்னிய மந்தாரம் பூத்த மதுத்திவலை ⋆

இன் இசை வண்டமரும் சோலைவாய் மாலை சேர் ⋆
மன்னிய மாமயில் போல் கூந்தல் ‖ **14** ‖

மழைத் தடங்கண்
மின் இடையாரோடும் விளையாடி வேண்டிடத்து ⋆
மன்னு மணித் தலத்து மாணிக்க மஞ்சரியின் ⋆
மின்னின் ஒளி சேர் பளிங்கு விளிம்படுத்த ⋆
மன்னும் பவளக் கால் செம் பொன் செய் மண்டபத்துள் ⋆
அன்ன நடைய அரம்பயர் தம் கைவளர்த்த ⋆
இன் இசை யாழ் பாடல் கேட்டின்புற்று ‖ **15** ‖

இரு விசும்பில்
மன்னு மழை தவழும் வாணிலா நீள் மதி தோய் ⋆
மின்னின் ஒளி சேர் விசும்பூரும் மாளிகை மேல் ⋆
மன்னு மணி விளக்கை மாட்டி ‖ **16** ‖

மழைக் கண்ணார்
பன்னு விசித்திரமாப் பாப்படுத்த பள்ளி மேல் ⋆
துன்னிய சாலேகம் சூழ் கதவம் தாள் திறப்ப ⋆
அன்னம் உழக்க நெறிந்துக்க வாள் நீலச் ⋆
சின்ன நறுந்தாது சூடி ‖ **17** ‖

ஓர் மந்தாரம்
துன்னு நறுமலரால் தோள் கொட்டி ⋆
கற்பகத்தின் மன்னு மலர் வாய் மணி வண்டு பின் தொடர ⋆
இன் இளம் பூந்தென்றல் புகுந்தீங்கிள முலை மேல் ⋆
நன்னறும் சந்தனச் சேறு புலர்த்த ‖ **18** ‖

தாங்கருஞ்சீர்
மின் இடை மேல் கை வைத்திருந்தேந்திள முலை மேல் ⋆
பொன் அரும்பாரம் புலம்ப ॥ **19** ॥

அகம் குழைந்தாங் -
கின்ன உருவின் இமையாத் தடங்கண்ணார் ⋆
அன்னவர் தம் மானோக்கம் உண்டாங்கணி முறுவல் ⋆
இன் அமுதம் மாந்தி இருப்பர் ॥ **20** ॥

இது அன்றே
அன்ன அறத்தின் பயன் ஆவது ⋆
ஒண் பொருளும் அன்ன திறத்ததே ஆதலால் ॥ **21** ॥

காமத்தின்
மன்னும் வழி முறையே நிற்றும் நாம் ⋆
மானோக்கின் அன்ன நடையார் அலரேச ஆடவர் மேல் ⋆
மன்னு மடல் ஊரார் என்பதோர் வாசகமும் ⋆
தென் உரையில் கேட்டறிவதுண்டு ॥ **22** ॥

அதனை யாம் தெளியோம்
மன்னும் வட நெறியே வேண்டினோம் ⋆
வேண்டாதார் தென்னன் பொதியில் செழுஞ்சந்தனக் குழம்பின் ⋆
அன்னதோர் தன்மை அறியாதார் ॥ **23** ॥

ஆயன் வேய்
இன் இசை ஓசைக்கிரங்காதார் ⋆
மால் விடையின் மன்னு மணி புலம்ப வாடாதார் ॥ **24** ॥

பெண்ணை மேல்
பின்னும் அவ்வன்றில் பேடை வாய்ச் சிறு குரலுக்கு ⋆
உன்னி உடல் உருகி நையாதார் ‖ **25** ‖

உம்பர் வாய்த்
துன்னு மதி உகுத்த தூ நிலா நீள் நெருப்பில் ⋆
தம் உடலம் வேவத் தளராதார் ‖ **26** ‖

காமவேள்
மன்னும் சிலை வாய் மலர் வாளி கோத்தெய்ய ⋆
பொன்னெடு வீதி புகாதார் ‖ **27** ‖

தம் பூ அணை மேல்
சின்ன மலர்க் குழலும் அல்குலும் மென் முலையும் ⋆
இன் இள வாடை தடவத் தாம் கண் துயிலும் ⋆
பொன் அனையார் பின்னும் திரு உறுக ‖ **28** ‖

போர் வேந்தன்
தன்னுடைய தாதை பணியால் அரசொழிந்து ⋆
பொன் நகரம் பின்னே புலம்ப வலங்கொண்டு ⋆
மன்னும் வளநாடு கைவிட்டு ‖ **29** ‖

மாதிரங்கள்
மின் உருவில் விண் தேர் திரிந்து வெளிப்பட்டு ⋆
கல் நிறைந்து தீய்ந்து கழை உடைந்து கால் சுழன்று ⋆
பின்னும் திரை வயிற்றுப் பேயே திரிந்துலவா ⋆
கொன்னவிலும் வெங்கானத்தூடு ‖ **30** ‖

கொடுங்கதிரோன்
துன்னு வெயில் வறுத்த வெம்பரல் மேல் பஞ்சடியால் ⋆

மன்னன் இராமன் பின் வைதேவி என்றுரைக்கும் ⋆
அன்ன நடைய அணங்கு நடந்திலளே ॥ **31** ॥

பின்னும் கரு நெடுங்கண் செவ்வாய்ப் பிணை நோக்கின் ⋆
மின் அனைய நுண் மருங்குல் வேகவதி என்றுரைக்கும் கன்னி ⋆
தன் இன் உயிராம் காதலனைக் காணாது ⋆
தன்னுடைய முன் தோன்றல் கொண்டேகத் தான் சென்று ⋆
அங்கன்னவனை நோக்காதழித்துரப்பி ॥ **32** ॥

வாள் அமருள்
கல் நவில் தோள் காளையைக் கைப் பிடித்து மீண்டும் போய் ⋆
பொன் நவிலும் ஆகம் புணர்ந்திலளே ॥ **33** ॥

பூங்கங்கை
முன்னம் புனல் பரக்கும் நல் நாடன் ⋆
மின் ஆடும் கொன்னவிலும் நீள் வேல் குருக்கள் குல மதலை ⋆
தன் நிகர் ஒன்றில்லாத வென்றித் தனஞ்சயனை ⋆
பன்னாகராயன் மடப் பாவை ॥ **34** ॥

பாவை தன்
மன்னிய நாண் அச்சம் மடம் என்றிவை அகல ⋆
தன்னுடைய கொங்கை முகம் நெரிய ॥ **35** ॥

தான் அவன் தன்
பொன்வரை ஆகம் தழீ இக்கொண்டு போய் ⋆
தனது நல் நகரம் புக்கு நயன்தினிது வாழ்ந்ததுவும் ⋆
முன் உரையில் கேட்டறிவதில்லையே ॥ **36** ॥

சூழ் கடலுள்
பொன் நகரம் செற்ற புரந்தரனோடேரொக்கும் ⋆

மன்னவன் வாணன் அவுணர்க்கு வாள் வேந்தன் ⋆
தன்னுடைய பாவை உலகத்துத் தன் ஒக்கும் ⋆
கன்னியரை இல்லாத காட்சியாள் ॥ **37** ॥

தன்னுடைய
இன் உயிர்த் தோழியால் எம் பெருமான் ஈன் துழாய் ⋆
மன்னு மணி வரைத் தோள் மாயவன் ॥ **38** ॥

பாவியேன்
என்னை இது விளைத்த ஈர் இரண்டு மால் வரைத் தோள் ⋆
மன்னவன் தன் காதலனை மாயத்தால் கொண்டு போய் ⋆
கன்னி தன் பால் வைக்க மற்றவனோடெத்தனையோ ⋆
மன்னிய பேர் இன்பம் எய்தினாள் ॥ **39** ॥

மற்றிவை தான்
என்னாலே கேட்டீரே ஏழைகாள் என் உரைக்கேன் ⋆
மன்னு மலை அரயன் பொற்பாவை ॥ **40** ॥

வாள் நிலா
மின்னு மணி முறுவல் செவ்வாய் உமை என்னும் ⋆
அன்ன நடைய அணங்கு நுடங்கிடை சேர் ⋆
பொன் உடம்பு வாடப் புலன் ஐந்தும் நொந்தகல ⋆
தன்னுடைய கூழைச் சடாபாரம் தான் தரித்து ⋆
ஆங்கன்ன அருந்தவத்தின் ஊடு போய் ॥ **41** ॥

ஆயிரந்தோள்
மன்னு கரதலங்கள் மட்டித்து ⋆
மாதிரங்கள் மின்னி எரி வீச மேல் எடுத்த சூழ் கழற்கால் ⋆
பொன் உலகம் ஏழும் கடந்தும்பர் மேல் சிலும்ப ⋆

மன்னு குல வரையும் மாருதமும் தாரகையும் ⋆
தன்னின் உடனே சுழலச் சுழன்றாடும் ⋆
கொன்னவிலும் மூ இலை வேல் கூத்தன் பொடி ஆடி ⋆
அன்னவன் தன் பொன் அகலம் சென்றாங்கணைந்திலளே ⋆
பன்னி உரைக்குங்கால் பாரதமாம் ॥ **42** ॥

பாவியேற் -
கென்னுறு நோய் யான் உரைப்பக் கேண்மின் ⋆
இரும் பொழில் சூழ் மன்னு மறையோர் திருநறையூர் மாமலை
போல் ⋆ பொன் இயலும் மாடக் கவாடம் கடந்து புக்கு ⋆
என்னுடைய கண் களிப்ப நோக்கினேன் ॥ **43** ॥

நோக்குதலும்
மன்னன் திருமார்பும் வாயும் அடி இணையும் ⋆
பன்னு கரதலமும் கண்களும் ॥ **44** ॥

பங்கயத்தின்
பொன் இயல் காடோர் மணிவரை மேல் பூத்தது போல் ⋆
மின்னி ஒளி படைப்ப வீழ் நாணும் தோள் வளையும் ⋆
மன்னிய குண்டலமும் ஆரமும் நீள் முடியும் ⋆
துன்னு வெயில் விரித்த சூளாமணி இமைப்ப ⋆
மன்னு மரதகக் குன்றின் மருங்கே ॥ **45** ॥

ஓர்
இன்னிள வஞ்சிக் கொடி ஒன்று நின்றது தான் ⋆
அன்னமாய் மானாய் அணி மயிலாய் ஆங்கிடையே ⋆
மின்னாய் இள வேய் இரண்டாய் இணைச் செப்பாய் ⋆
முன்னாய தொண்டையாய்க் கெண்டைக் குலம் இரண்டாய் ⋆
அன்ன திரு உருவம் நின்றதறியாதே ⋆

என்னுடைய நெஞ்சும் அறிவும் இன வளையும் ⋆
பொன் இயலும் மேகலையும் ஆங்கொழியப் போந்தேற்கு ⋆
மன்னு மறி கடலும் ஆர்க்கும் ॥ **46** ॥

மதி உகுத்த
இன் நிலாவின் கதிரும் என் தனக்கே வெய்தாகும் ⋆
தன்னுடைய தன்மை தவிரத் தான் என் கொலோ ⋆
தென்னன் பொதியில் செழுஞ்சந்தின் தாதளைந்து ⋆
மன்னிவ்வுலகை மனங்களிப்ப வந்தியங்கும் ⋆
இன் இளம் பூந்தென்றலும் வீசும் எரி எனக்கே ⋆
முன்னிய பெண்ணை மேல் முள் முளரிக் கூட்டகத்து ⋆
பின்னும் அவ்வன்றில் பேடை வாய்ச் சிறு குரலும் ⋆
என்னுடைய நெஞ்சுக்கோர் ஈர் வாளாம் என் செய்கேன் ⋆
கல் நவில் தோள் காமன் கருப்புச் சிலை வளைய ⋆
கொல் நவிலும் பூங்கணைகள் கோத்துப் பொத அணைந்து ⋆
தன்னுடைய தோள் கழிய வாங்கி ॥ **47** ॥

தமியேன் மேல்
என்னுடைய நெஞ்சே இலக்காக எய்கின்றான் ⋆
பின் இதனைக் காப்பீர் தாம் இல்லையே ॥ **48** ॥

பேதையேன்
கல் நவிலும் காட்டகத்தோர் வல்லிக் கடி மலரின் ⋆
நல் நறு வாசம் மற்றாரானும் எய்தாமே ⋆
மன்னும் வறு நிலத்து வாளாங்குகுத்தது போல் ⋆
என்னுடைய பெண்மையும் என் நலனும் என் முலையும் ⋆
மன்னு மலர் மங்கை மைந்தன் ॥ **49** ॥

கணபுரத்துப்
பொன் மலை போல் நின்றவன் தன் பொன் அகலம் தோயாவேல் ⋆
என் இவை தான் வாளா எனக்கே பொறை ஆகி ⋆
முன் இருந்து மூக்கின்று மூவாமைக் காப்பதோர் ⋆
மன்னு மருந்தறிவீர் இல்லையே ‖ **50** ‖

மால் விடையின்
துன்னு பிடர் எருத்துத் தூக்குண்டு ⋆
வன் தொடரால் கன்னியர் கண் மிளிரக் கட்டுண்டு ‖ **51** ‖

மாலை வாய்த்
தன்னுடைய நா ஒழியாதாடும் தனி மணியின் ⋆
இன் இசை ஓசையும் வந்தென் செவி தனக்கே ⋆
கொல் நவிலும் எஃகின் கொடிதாய் நெடிதாகும் ⋆
என் இதனைக் காக்கும் ஆ சொல்லீர் ‖ **52** ‖

இது விளைத்த
மன்னன் நறுந்துழாய் வாழ் மார்பன் ⋆
மா மதி கோள் முன்னம் விடுத்த முகில் வண்ணன் ‖ **53** ‖

காயாவின்
சின்ன நறும் பூந்திகழ் வண்ணன் ⋆
வண்ணம் போல் அன்ன கடலை மலை இட்டணை கட்டி ⋆
மன்னன் இராவணனை மா மண்டு வெஞ்சமத்து ⋆
பொன் முடிகள் பத்தும் புரளச் சரந்துரந்து ⋆
தென் உலகம் ஏற்றுவித்த சேவகனை ‖ **54** ‖

ஆயிரக் கண்
மன்னவன் வானமும் வானவர் தம் பொன் உலகும் ⋆

தன்னுடைய தோள் வலியால் கைக் கொண்ட தானவனை ⋆
பின் ஓர் அரி உருவம் ஆகி எரி விழித்து ⋆
கொல் நவிலும் வெஞ்சமத்துக் கொல்லாதே ॥ **55** ॥

வல்லாளன்
மன்னு மணிக் குஞ்சி பற்றி வர வீர்த்து ⋆
தன்னுடைய தாள் மேல் கிடாத்தி ॥ **56** ॥

அவனுடைய
பொன் அகலம் வள் உகிரால் போழ்ந்து புகழ் படைத்த ⋆
மின் இலங்கும் ஆழிப் படைத் தடக்கை வீரனை ⋆
மன்னிவ்வகல் இடத்தை மா முது நீர் தான் விழுங்க ⋆
பின்னும் ஓர் ஏனமாய் புக்கு வளை மருப்பில் ⋆
கொல் நவிலும் கூர் நுதி மேல் வைத்தெடுத்த கூத்தனை ⋆
மன்னும் வட மலையை மத்தாக மாசுணத்தால் ⋆
மின்னும் இரு சுடரும் விண்ணும் பிறங்கொளியும் ⋆
தன்னின் உடனே சுழல மலை திரித்து ⋆
ஆங்கின் அமுதம் வானவரை ஊட்டி ⋆
அவருடைய மன்னும் துயர் கடிந்த வள்ளலை ॥ **57** ॥

மற்றன்றியும்
தன் உருவம் ஆரும் அறியாமல் தான் அங்கோர் ⋆
மன்னும் குறள் உருவின் மாணியாய் ॥ **58** ॥

மாவலி தன்
பொன் இயலும் வேள்விக்கண் புக்கிருந்து ⋆
போர் வேந்தர் மன்னை மனங்கொள்ள வஞ்சித்து நெஞ்சுருக்கி ⋆
என்னுடைய பாதத்தால் யான் அளப்ப மூவடி மண் ⋆
மன்னா ! தருகென்று வாய் திறப்ப ॥ **59** ॥

மற்றவனும்
என்னால் தரப்பட்டதென்றலுமே ⋆
அத்துணைக்கண் மின்னார் மணி முடி போய் விண் தடவ ‖ **60** ‖

மேல் எடுத்த
பொன் ஆர் கனை கழற்கால் ஏழுலகும் போய்க் கடந்து ⋆
அங்கொன்னா அசுரர் துளங்கச் செல நீட்டி ⋆
மன்னிவ்வகல் இடத்தை மாவலியை வஞ்சித்து ⋆
தன் உலகம் ஆக்குவித்த தாளானை ‖ **61** ‖

தாமரை மேல்
மின் இடையாள் நாயகனை விண்ணகருள் பொன் மலையை ⋆
பொன்னி மணி கொழிக்கும் பூங்குடந்தைப் போர் விடையை ⋆
தென்னன் குறுங்குடியுள் செம் பவளக் குன்றினை ⋆
மன்னிய தண் சேறை வள்ளலை ‖ **62** ‖

மா மலர் மேல்
அன்னம் துயிலும் அணி நீர் வயல் ஆலி ⋆
என்னுடைய இன் அமுதை எவ்வுள் பெரு மலையை ⋆
கன்னி மதிள் சூழ் கணமங்கைக் கற்பகத்தை ⋆
மின்னை இரு சுடரை வெள்ளறையுள் கல்லறை மேல்
பொன்னை ⋆ மரதகத்தைப் புட்குழி எம் போர் ஏற்றை ⋆
‡மன்னும் அரங்கத்தெம் மா மணியை ‖ **63** ‖

வல்லவாழ்ப்
பின்னை மணாளனைப் பேரில் பிறப்பிலியை ⋆
தொன்னீர்க் கடல் கிடந்த தோளா மணிச் சுடரை ⋆
என் மனத்து மாலை இடவெந்தை ஈசனை ⋆
மன்னும் கடல் மல்லை மாயவனை ‖ **64** ‖

வானவர் தம்
சென்னி மணிச் சுடரைத் தண்கால் திறல் வலியை ⋆
தன்னைப் பிறர் அறியாத் தத்துவத்தை முத்தினை ⋆
அன்னத்தை மீனை அரியை அரு மறையை ⋆
முன்னிவ்வுலகுண்ட மூர்த்தியை ॥ **65** ॥

கோவலூர்
மன்னும் இடைகழி எம் மாயவனை ⋆
பேய் அலறப் பின்னும் முலை உண்ட பிள்ளையை ॥ **66** ॥

அள்ளல் வாய்
அன்னம் இரை தேர் அழுந்தூர் எழும் சுடரை ⋆
தென் தில்லைச் சித்திரகூடத்தென் செல்வனை ॥ **67** ॥

மின்னி மழை தவழும் வேங்கடத்தெம் வித்தகனை ⋆
மன்னனை மாலிருஞ்சோலை மணாளனை ⋆
கொல் நவிலும் ஆழிப் படையானை ॥ **68** ॥

கோட்டியூர்
அன்ன உருவின் அரியை ⋆
திருமெய்யத்தின் அமுத வெள்ளத்தை இந்தளூர் அந்தணனை ⋆
மன்னு மதிட்கச்சி வேளுக்கை ஆள் அரியை ⋆
மன்னிய பாடகத்தெம் மைந்தனை ॥ **69** ॥

வெஃகாவில்
உன்னிய யோகத்துறக்கத்தை ⋆
ஊரகத்துள் அன்னவனை அட்ட புயகரத்தெம் ஆனேற்றை ⋆
என்னை மனங்கவர்ந்த ஈசனை ॥ **70** ॥

வானவர் தம்
முன்னவனை மூழிக்களத்து விளக்கினை ⋆
அன்னவனை ஆதனூர் ஆண்டளக்கும் ஐயனை ⋆
நென்னலை இன்றினை நாளையை ‖ **71** ‖

நீர்மலை மேல்
மன்னு மறை நான்கும் ஆனானை ⋆
புல்லாணித் தென்னன் தமிழை வட மொழியை ⋆
நாங்கூரில் மன்னு மணி மாடக் கோயில் மணாளனை ⋆
நல் நீர்த் தலைச்சங்க நாண் மதியை ‖ **72** ‖

நான் வணங்கும்
கண்ணனைக் கண்ணபுரத்தானை ⋆
தென் நறையூர் மன்னு மணி மாடக் கோயில் மணாளனை ⋆
கல் நவில் தோள் காளையைக் கண்டாங்குக் கை தொழுது ⋆
என் நிலைமை எல்லாம் அறிவித்தால் எம் பெருமான் ⋆
தன் அருளும் ஆகமும் தாரானேல் ‖ **73** ‖

தன்னை நான்
மின் இடையார் சேர் இயிலும் வேதியர்கள் வாழ்விடத்தும் ⋆
தன் அடியார் முன்பும் தரணி முழுதாளும் ⋆
கொல் நவிலும் வேல் வேந்தர் கூட்டத்தும் நாட்டகத்தும் ⋆
தன் நிலைமை எல்லாம் அறிவிப்பன் ‖ **74** ‖

தான் முன நாள்
மின் இடை ஆய்ச்சியர் தம் சேரிக் களவின்கண் ⋆
துன்னு படல் திறந்து புக்கு ‖ **75** ‖

தயிர் வெண்ணெய்
தன் வயிறார விழுங்க ⋆
கொழுங்கயல் கண் மன்னு மடவோர்கள் பற்றியோர் வான்
கயிற்றால் ⋆ பின்னும் உரலோடு கட்டுண்ட பெற்றிமையும் ⋆
அன்னதோர் பூதமாய் ஆயர் விழவின் கண் ⋆
துன்னு சகடத்தால் புக்க பெருஞ்சோற்றை ⋆
முன் இருந்து முற்றத் தான் துற்றிய தெற்றெனவும் ⋆
மன்னர் பெருஞ்சவையுள் வாழ் வேந்தர் தூதனாய் ⋆
தன்னை இகழ்ந்துரைப்பத் தான் முன நாள் சென்றதுவும் ⋆
மன்னு பறை கறங்க மங்கையர் தம் கண்களிப்ப ⋆
கொன்னவிலும் கூத்தனாய்ப் பேர்த்தும் குடம் ஆடி ⋆
என் இவன் என்னப் படுகின்ற ஈடறவும் ⋆
தென் இலங்கை ஆட்டி அரக்கர் குலப் பாவை ⋆
மன்னன் இராவணன் தன் நல் தங்கை ‖ **76** ‖

வாள் எயிற்றுத்
துன்னு சுடு சினத்துச் சூர்பணகா சோர்வெய்தி ⋆
பொன் நிறங்கொண்டு புலர்ந்தெழுந்த காமத்தால் ⋆
தன்னை நயந்தாளைத் தான் முனிந்து மூக்கரிந்து ⋆
மன்னிய திண்ணெனவும் வாய்த்த மலை போலும் ⋆
தன் நிகர் ஒன்றில்லாத தாடகையை ‖ **77** ‖

‡ மா முனிக்காத்
தென் உலகம் ஏற்றுவித்த திண் திறலும் ⋆
மற்றிவை தான் உன்னி உலவா உலகறிய ஊர்வன் நான் ⋆
முன்னி முளைத்தெழுந்தோங்கி ஒளி பரந்த ⋆
மன்னிய பூம் பெண்ணை மடல் ‖ **78** ‖

என் நிலைமை எல்லாம் அறிவித்தால் எம் பெருமான்⋆
தன் அருளும் ஆகமும் தாரானேல்⋆
பின்னைப் போய் ஒண்டுறைநீர் வேலை உலகறிய ஊர்வன் நான்⋆
வண்டறை பூம் பெண்ணை மடல்

பெறிய திருமடல் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்